

தலைமைச் செயலகத்தில் நேற்று (24.10.2025) நிதி, சுற்றுச் சூழல் மற்றும் கால நிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவிடம் தமிழ்நாடு அரசின் 2024-2025 ஆம் நிதியாண்டிற்கான தமிழ்நாடு அரசின் பங்கு மூலதனமான ரூ.7.13 கோடிக்கான 30 சதவிகித ஈவுத் தொகையான ரூ.2.14 கோடிக்கான காசோலையினை, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை அரசு கூடுதல் செயலாளர் மற்றும் கி.பாலசுப்ரமணியம், முன்னிலையில் ரெப்கோ வங்கியின் தலைவர் இ. சந்தானம், வங்கியின் இயக்குநர் மற்றும் ரெப்கோ வீட்டு கடன் நிறுவனத்தின் தலைவர் சி. தங்கராஜு மற்றும் வங்கியின் நிர்வாக இயக்குநர் ஓ.எம். கோகுல் ஆகியோர் வழங்கினர்.

தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரத்தில் நடைபெற்று வரும் பாரதியார் பிறந்த வீட்டை பழமை மாறாமல் புதுப்பிக்கும் பணியினை அமைச்சர் பெ.கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள் உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பவத், ஒன்றிய செயலாளர் மும்மூர்த்தி, சின்ன மாரிமுத்து, நவநீத கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடி

மருதிருவரின் நினைவை என்றும் போற்றுவோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக்.25-

மருது சகோதரர்களின் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

சிவகங்கைச் சீமையின் வீரத்துக்கு எடுத்துக்காட்டாக இம் மண்ணில் நிலைத்திருக்கும் மருது சகோதரர்கள் நினைவு நாள்.

ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராடும் உணர்வை அந்நாளிலேயே விதைத்து, தலைசிறந்த தியாகிகளாகத் தூக்குக் கயிற்றை முத்தமிட்ட மருதிருவரின் நினைவை என்றும் போற்றுவோம்! இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாகத் தமிழர்கள் முன்னின்று உயிர் நீத்த வரலாற்றைத் தொடர்ந்து சொல்லுவோம்!

இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

கோவில்பட்டியில் - முத்தமிழறிஞர் கலைஞர் வெண்கல திருவுருவச் சிலை!

அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி, அக். 25 -

தி.மு.க. தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகின்ற அக்டோபர் 28 ஆம் தேதி தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல முழு திருவுருவச் சிலையை திறந்து வைக்கிறார் என அமைச்சர் கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

வரலாற்றுச் சிறப்புமிக்க பேரியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தலைமையகமான சென்னை அண்ணா அறிவாலயம் மட்டுமின்றி, மாவட்டங்கள் தோறும் கட்சி அலுவலகங்கள் அமைந்துள்ளன.

அந்த வரிசையில் கடந்த 01.10.2000 அன்று அப்போதைய ஒருங்கிணைந்த தூத்துக் குடி மாவட்ட தி.மு.க. வுக்கென தூத்துக்குடி எட்டையபுரம் சாலையில் கலைஞர் அரங்கம் என். பெரியசாமி அவர்களால் கட்டப்பட்டு அப்போதைய முதலமைச்சரான கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கோவில்பட்டி மேற்கு நகர திமுக அலுவலகம் கோவில்பட்டி இளையரசனேந்தல் சாலையில் புதிதாகக்கட்டப்பட்டுள்ளது.

மேலும் நவீன தமிழகத்தின் சிற்பி என்றழைக்கப்பட்டவரும், தாய்மொழியாம் தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தவரும், தொலைநோக்குச் சிந்தனையுடன் இளைஞர்களின் எதிர்காலம் சிறக்க இந்தியாவிலேயே முதல்முறையாக தகவல் தொழில்நுட்பத்திற்கென தனித்துறையை உருவாக்கியதுடன், TIDEL PARK என்று சொல்லக்கூடிய தகவல் தொழில்நுட்ப பூங்கா உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கி தொழில்துறையில் மாபெரும் புரட்சிக்கு வித்திட்ட வருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல முழு திருவுருவச் சிலை கோவில்பட்டி மேற்கு நகர தி.மு.க. அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

வருகின்ற அக்டோபர் 28ஆம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை மதுரை விமான நிலையம் வருகைதரும் தி.மு.க. தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அங்கிருந்து சாலை மார்க்கமாக கோவில்பட்டி சென்று மாலை 6 மணியளவில் கோவில்பட்டி

இளையரசனேந்தல் சாலையில் அமைந்துள்ள கோவில்பட்டி மேற்கு நகர தி.மு.க. அலுவலகத்தையும், அங்கு நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல முழு திருவுருவச் சிலையையும் திறந்து வைக்க உள்ளார்கள்.

அந்நிகழ்வின் போது தூத்துக்குடி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாமன்னர்கள் மருது சகோதரர்கள் 224-வது நினைவு நாள் – சிலைக்கு மரியாதை!

மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினர் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

மதுரை, அக். 25 -

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

"மாமன்னர்கள் மருது சகோதரர்கள் 224வது குருபூஜையை" முன்னிட்டு, மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் 27.10.2025 திங்கள்கிழமை காலை 10.00 மணியளவில் தெப்பக்குளத்தில் அமைந்துள்ள, "மாமன்னர்கள் மருது சகோதரர்களின் திருவுருவச்சிலைக்கு" மாலை அணிவித்து மரியாதை செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திண்டிவனம் நகராட்சி நல்லியக் கோடான் உயர்மட்ட பாலம்!

கர்ணாவூர் செல்லும் மழை நீர் வடிகால் வாய்க்காலில் ஆய்வு!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டார்!

திண்டிவனம் , அக். 25 -

திண்டிவனம் நகராட்சி நல்லிய கோடான் உயர் மட்ட பாலம் மற்றும் கர்ணாவூர் பாட்டை, கர்ணாவூர் செல்லும் மழை நீர் வடிகால் வாய்க்காலை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் வடகிழக்கு பருவமழையினால் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது நேற்று முன்தினம் மாலை சுமார் ஒரு மணி நேரமாக திண்டி வனம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கன மழை பெய்ததால் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

இந்நிலையில் திண்டிவனம் நகராட்சி 26 வார்டில் உள்ள நல்லிய கோடான் உயர் மட்ட மேம்பாலம்மழை நீரால் உள்வாங்கியது.

இதையடுத்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ நேரில் சென்றுமழை நீரால் பாதிப்பான நல்லியக் கோடான் மேம்பாலத்தை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் அப்பகுதியில் தடுப்புகளை ஏற்படுத்தி பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்துதிண்டிவனம் நகராட்சி 33வது வார்டு கர்ணாவூர்பேட்டையில்செல்லும் மழை நீர் வடிகால் வாய்க்காலையும், அதேபோல் சுடுகாடு இடுகாடு பகுதியில் செல்லும் பெரிய மழைநீர் வாய்க்கால் பகுதியையும், பழுதடைந்த கருமகாரிய கொட்டகை, கர்ணாவூர் செல்லும் வழியில் உள்ள பாலத்தினையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் பானுமதி, நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், மரக்காணம் மேற்கு ஒன்றியசெயலாளர் பழனி, பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், துணை சேர்மன் ராஜலட்சுமி வெற்றிவேல், நகர மன்ற உறுப்பினர்கள் உமாசாய் செந்தில்,

சீனி சின்னராஜ், பிர்லா செல்வம், பாபு, நீர்வலத் துறை உதவி செயற்பொறியாளர் அய்யப்பன், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் நியமனம்!

தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் – முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

DMK IT WING

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட, மாவட்ட துணை, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் பின் வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்.

தேனி தெற்கு மாவட்டம்

தேனி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சையது உசேன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக அ.திலீப்ராஜ்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தேனி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட சத்தியசீலன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ரா.வீரபாண்டிய பிரபு அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தேனி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட ராஜ் குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.முத்துலட்சுமி அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி

ஆண்டிபட்டி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட இளங்கோ அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக வீ.திலீபன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட வீ.திலீபன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக வே.அஜித்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட அஜித்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக சு.சுரேஷ் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சதீஷ் குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக சி.வாசுதேவன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கடமலை மயிலை வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட கே.அழகர்சாமி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக அ.அருண்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கடமலை மயிலை வடக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சூர்யபிரபு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக பா.விஜயராஜன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கடமலை மயிலை தெற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட ராஜமாணிக்கம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ரா.சதீஸ்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட பி. ஆகாஷ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக மு.சஞ்சய்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சி.சதீஷ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக த.ஜெயசூர்யா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட அருண் பாபு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ர.விஜய் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஆண்டிபட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட வீரபாண்டியபிரபு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக வினோத்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

காமயகவுண்டன்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட ஆனந்த் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ம.சிவக்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் சட்டமன்றத் தொகுதி

கம்பம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட திலிப் ராஜ்குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக அ.சேக் அப்துல்லா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. விமலா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக திருமதி.விஜிதா சாமிகண்ணன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சின்னமனூர் கிழக்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட B.செல்லபாண்டி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக மு.ஆனந்தன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

உத்தமபாளையம் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட எம்.கோபிநாத் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக சூ.அருண்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பண்ணைப்புரம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. ஜி.ரேணுகா தேவி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.வி.மதுபாலா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஒடைப்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட இளையராஜா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக பி.ராஜா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஒடைப்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. கே.முத்துலட்சுமி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.சரஸ்வதி அழகர்சாமி அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சின்னமனூர் நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட கதிரேசன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ம.முகைதீன் அப்துல்காதர் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

புதுப்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட எம்.கேசவன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ம.கார்த்திக் குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

புதுப்பட்டி பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட பி.கார்த்திக் பிரபு அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ச.ராஜமுருகன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தேவாரம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட கே.அரவிந்தன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ராஜா முகமது அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தேவாரம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) ராபின் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

உத்தமபாளையம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட கௌதம் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக அஜித்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

உத்தமபாளையம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட சுபாஷ் சந்திர போஸ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக ரா.முகமது பிலால் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

உத்தமபாளையம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி. வினோதினி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக திருமதி.பாத்திமா கனி அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

சின்னமனூர் நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட ஷேக் அப்துல்லா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக சு.சரவணன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கோம்பை பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட எஸ். பிரேம் குமார் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக மா.ராஜ்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பண்ணைப்புரம் பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட பி. நாகராஜ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக ப.சரவணக்குமார் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பண்ணைப்புரம் பேரூர் ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைதளம்) நியமிக்கப்பட்ட ஜே.ஜெய பிரகாஷ் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக செல்வின்ராஜா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் வடக்கு நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி சி. சந்திரலேகா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக திருமதி.அ.சந்திரா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

கம்பம் தெற்கு நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட திருமதி.ரேவதி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக திருமதி.லாவண்யா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி